CC.No.47/2026 dt:26.02.2026
on the file of DM cum JM Court, Ntm.

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.**

**முன்னிலை : திருமதி.ஜா.ஆ.ஃப்ரீன் பேகம், M.Com., L.L.M.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நத்தம்.

2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 26ம் நாள் வியாழக்கிழமை

திருவள்ளுவராண்டு 2057 ஸ்ரீவிசுவாச வருடம், பங்குனி திங்கள் 12ம் நாள்

**ஆண்டுபட்டிகை வழக்கு எண்.**47/2026

CNR No.TNDG100020542024

குற்றமுறையிடுபவர் – காவல் சார்பு ஆய்வாளர்
நத்தம் காவல் நிலைய
குற்ற எண்.611/2015

எதிரிகளின் பெயர்கள் –

1. பாக்கியராஜ் த/பெ.பழனிஅம்பலம்
2. தங்கையா த/பெ.பச்சையன்
3. பழனிச்சாமி த/பெ.ஆண்டி
4. பால்சாமி த/பெ.பாகன்அம்பலம்
5. சுந்தரராஜ் த/பெ.பொன்னழகு

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற 07.04.2021 நாளிட்ட R.O.C No.814/2020/RG/FI(P.Dis.No.36/2021) உத்தரவின்படி CASE SUMMARY கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது.

**CASE SUMMARY**

| (i) | The period of remand of the accused | : | Name of the Accused | Date of Arrest/Remand | Release on |
|---|---|---|---|---|---|
| | | | 1.பாக்கியராஜ் த/பெ.பழனிஅம்பலம் பெரியமலையூர், குட்டுப்பட்டி, நத்தம் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம். | 21.10.2015 | 07.12.2015 |
| | | | 2. தங்கையா த/பெ.பச்சையன் பெரியமலையூர், குட்டுப்பட்டி, நத்தம் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம். | 21.10.2015 | 07.12.2015 |
| | | | 3. பழனிச்சாமி த/பெ.ஆண்டி பெரியமலையூர், குட்டுப்பட்டி, நத்தம் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம். | 21.10.2015 | 07.12.2015 |

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Date: 2026.03.26 15:11:26 +0530

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | 4. பால்சாமி த/பெ.பாகன்அம்பலம் பெரியமலையூர், குட்டுப்பட்டி, நத்தம் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம்.<br><br>5. சுந்தரராஜ் த/பெ.பொன்னழகு பெரியமலையூர், குட்டுப்பட்டி, நத்தம் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம். | 21.10.2015<br><br>21.10.2015 | 07.12.2015<br><br>07.12.2015 |
| (ii) | Date of filing of the complaint/final report in the court | : | Filing of Complaint | Filing of Final Report | |
| | | | 21.10.2015 | 30.11.2015 | |
| (iii) | Date of committal of the cases to the Court of Sessions: | : | Nil | | |
| (iv) | Date of questioning of the accused under Section 228, 240 and 251 of the Code of Criminal Procedure 1973, as the case may be; | : | 12.03.2026ம் தேதி அன்று நத்தம் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் குற்றம் சாட்டப்பட்ட எதிரிகள் மீது பிரிவு 394 இ.த.சவின் கீழ் குற்றம் குறித்து விளக்கி கூறப்பட்டது. | | |
| (v) | Filing of all miscellaneous petitions and their results | : | Crl.M.P.No.124/2026 Dt.19.02.2026 u/s.311 of Crpc Petition filed and allowed<br>Crl.M.P.No.123/2026 Dt.19.02.2026 u/s.320 of crpc Petition Dismissed. | | |
| | | | Nil | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (vi) | Date of Examination in Chief and Cross | : | Name of the Examination | | Date of Chief | Date of Cross |
| | | | PW1 | திரு.மெய்யன் (புகார்தாரர்) | 13.03.2026 | 13.03.2026 |
| | | | PW2 | திரு.தென்னரசு (பார்வைமகஜர் சாட்சி) | 13.03.2026 | 13.03.2026 |
| | | | PW3 | குமரேசன் (ஒப்புதல் வாக்குமூல சாட்சி) | 17.03.2026 | 17.03.2026 |
| | | | PW4 | உலகநாதன் (புலன் விசாரணை அதிகாரி) | 23.03.2026 | 19.02.2026 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (vii) | Date of examination of the accused under section 313 of the Code; | : | 24.03.2026 | | |
| (viii) | Details of abscondance of an accused and his appearance /production, as the case may be; and | : | Nil | | |
| (ix) | Grant of stay by superior courts and the results thereof | : | Sessions Court CMP Numbers | High Court No and Date of Stay | Result |
| | | | Nil | | |

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.03.26 15:11:32 +0530

| | | |
|---|---|---|
| குற்றஞ்சாட்டு: | : | கடந்த 21.10.2015ம் தேதி காலை 08.00 மணியளவில் வாதி மெய்யன், பட்டியல்சாட்சி 2 அழகர்சாமியுடன் ஆட்டுக்கடா வாங்க பணம் ரூ.10,000/–உடன் நடந்து சென்ற போது 1 முதல் 5 எதிரிகள் அரிவாள், கத்தி, கம்பு, கயிறு போன்ற ஆயுதங்களுடன் கொள்ளை அடிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் வந்து வாதி மெய்யன் கழுத்தில் 1வது எதிரி பாக்கியராஜ் கத்தியை வைத்தும், 2வது எதிரி தங்கையா கத்தியை காட்டியும், 3வது எதிரி பழனிச்சாமி கயிற்றால் வாதி மெய்யனின் கழுத்தை நெறித்தும், 4வது எதிரி பால்சாமி அரிவாளால் வாதிக்கு உயிர்பயத்தை ஏற்படுத்தியும், 5வது எதிரி சுந்தரராஜ் வாதி மெய்யன் பாக்கெட்டில் இருந்த பணம் ரூ.10000/–த்தை திருடியதாக எதிரிகள் மீது பிரிவு 394 இ.த.சவின் கீழ் குற்றம் சாட்டப்பட்டது. |
| எதிரிகளின் பதில் | : | குற்றவாளிகள் இல்லை |
| நீதிபதியின் தீர்மானம் | : | குற்றவாளிகள் இல்லை |
| தண்டனை (அ) உத்தரவு | : | இறுதியாக, அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில், எதிரிகள் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லையென இந்நீதிமன்றம் தீர்மானித்து, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி, இவ்வழக்கின் எதிரிகள் மீது பிரிவுகள் 394 இ.த.சவின் கீழ் குற்றவாளிகள் இல்லை என்று தீர்மானித்து, மேற்படி எதிரிகளை 248(1) of கு.வி.மு.சவின் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகின்றது. |
| | | எதிரிகள் நிறைவேற்றி தந்த பிணைமுறி மேல்முறையீட்டு காலத்திற்கு பின்பு ரத்தாக உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் RPR No.15/2026ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள அ.சா.பொ.1 பணம் ரூ.50/– (2 நோட்டுகள்= மொத்தம் ரூ.100/–) தற்போது வரை மேற்படி தொகையை கோரி யாரும் மனு செய்யவில்லை என்பதை கவனத்தில் கொண்டும், மேல்முறையீட்டு காலத்திற்குள் உரியமுறையில் மனு செய்யும்பட்சத்தில் மேற்படி சொத்து தொடர்பாக உத்தரவு பிறப்பிக்கப்படும் என்றும், இல்லாத பட்சத்தில் அந்த தொகையை அரசுக்கு ஆதாயப்படுத்த வேண்டும் என்றும், அ.சா.பொ.2 கத்தியை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அழிக்கவும் உத்தரவிடப்படுகிறது. |

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.03.26 15:11:37 +0530

இவ்வழக்கு 07.03.2026ம் தேதி கோப்புக்கு எடுக்கப்பட்டு இறுதியாக 24.03.2026 அன்று விசாரணைக்கு வந்த போது அரசுத் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை–I திருமதி. P. அமர்ஜோதி அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் திரு.S.அர்ஜீன் வழக்கறிஞரும் ஆஜராகி இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளை கேட்டு வழக்காவணங்களை பரிசீலனை செய்து இதுநாள்வரை இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**தீர்ப்புரை**

இவ்வழக்கானது சட்டப்பிரிவு 394 இந்திய தண்டனைச் சட்டம் 1860ன் கீழ் நத்தம் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்டு கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. இதன் பிறகு இந்திய தண்டனைச் சட்டம் 1860 இ.த.ச எனவும், குற்றவியல் விசாரணை முறைச் சட்டம் 1973 கு.வி.மு.ச எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

2) **இறுதியறிக்கையின்படி அரசு தரப்பு வழக்கு :–**

கடந்த 21.10.2015ம் தேதி காலை 08.00 மணியளவில் வாதி மெய்யன், பட்டியல்சாட்சி 2 அழகர்சாமியுடன் ஆட்டுக்கடா வாங்க பணம் ரூ.10,000/–உடன் நடந்து சென்ற போது 1 முதல் 5 எதிரிகள் அரிவாள், கத்தி, கம்பு, கயிறு போன்ற ஆயுதங்களுடன் கொள்ளை அடிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் வந்து வாதி மெய்யன் கழுத்தில் 1வது எதிரி பாக்கியராஜ் கத்தியை வைத்தும், 2வது எதிரி தங்கையா கத்தியை காட்டியும், 3வது எதிரி பழனிச்சாமி கயிற்றால் வாதி மெய்யனின் கழுத்தை நெறித்தும், 4வது எதிரி பால்சாமி அரிவாளால் வாதிக்கு உயிர்பயத்தை ஏற்படுத்தியும், 5வது எதிரி சுந்தரராஜ் வாதி மெய்யன் பாக்கெட்டில் இருந்த பணம் ரூ.10000/–த்தை திருடியதாக எதிரிகள் மீது சட்டப்பிரிவு 394 இ.த.சவின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.03.26 15:11:43 +0530

3) எதிரிகளுக்கு எதிரான இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் ஆண்டு பட்டிகை வழக்கு எண் – 47/2026 என கோப்புக்கு எடுக்கப்பட்டு, எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. எதிரிகள் முன்னிலையானவுடன், அரசு தரப்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. பிரிவு 207ன் கீழ் 12.03.2026ம் தேதி அன்று இலவசமாக வழங்கப்பட்டது.

4) எதிரிகளுக்கு போதிய அவகாசம் அளித்து ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், முதல் நோக்கு சாத்திய கூறுகள் இருப்பதால் 12.03.2026ம் தேதியன்று எதிரிகள் மீது சட்டப்பிரிவு 394 இந்திய தண்டனைச் சட்டம் 1860ன் கீழும் குற்றச்சாட்டுக்கள் குறித்து பிரிவு 240 கு.வி.மு.ச–வின் கீழ் தமிழில் விளக்கி கூறி வினவிய போது எதிரிகள் குற்றச்சாட்டுகளை மறுத்து தாங்கள் குற்றவாளிகள் இல்லை என கூறினார்கள். எனவே, அரசு தரப்பு சாட்சிய விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

5) அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 ஆகியோர்கள் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டனர். அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.11 வரையிலான ஆவணங்களும், அ.சா.பொ.1 மற்றும் அ.சா.பொ.2 சான்று பொருளும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் தாக்கல் இல்லை.

**<u>6) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரிய வரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு –</u>**

7) கடந்த 21.10.2015ம் தேதி காலை 08.00 மணியளவில் வாதி மெய்யன், பட்டியல்சாட்சி 2 அழகர்சாமியுடன் ஆட்டுக்கடா வாங்க பணம் ரூ.10,000/–உடன் நடந்து சென்ற போது 1 முதல் 5 எதிரிகள் அரிவாள், கத்தி, கம்பு, கயிறு போன்ற ஆயுதங்களுடன் கொள்ளை அடிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் வந்து வாதி மெய்யன் கழுத்தில் 1வது எதிரி பாக்கியராஜ்

கத்தியை வைத்தும், 2வது எதிரி தங்கையா கத்தியை காட்டியும், 3வது எதிரி பழனிச்சாமி கயிற்றால் வாதி மெய்யனின் கழுத்தை நெறித்தும், 4வது எதிரி பால்சாமி அரிவாளால் வாதிக்கு உயிர்பயத்தை ஏற்படுத்தியும், 5வது எதிரி சுந்தரராஜ் வாதி மெய்யன் பாக்கெட்டில் இருந்த பணம் ரூ.10000/–த்தை திருடியதாக அ.சா.1, அ.சா.4 காவல் சார்பு ஆய்வாளர் உலகநாதன் என்பவரிடம் அ.த.சா.ஆ.1 புகார் செய்துள்ளார்.

8) மேற்படி புகாரை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட அ.சா.4 காவல் சார்பு ஆய்வாளர் உலகநாதன் புகார் மனு பெற்று நத்தம் காவல்நிலைய கு.எண்.611/2015 இ.த.ச.324, 395, 506(2) பிரிவுகளின் கீழ் பதிவு செய்து வைத்திருந்த அ.த.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கையை பார்வையிட்டு தனது புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு அதே தேதியில் 21.10.2015 காலை 11.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் அ.சா.2 தென்னரசு மற்றும் பட்டியல் சாட்சி 4 சேவுகன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.த.சா.ஆ.5 மாதிரி வரைபடம் வரைந்து அ.த.சா.ஆ.6 பார்வைமகஜர் தயார் செய்துள்ளார்.

9) பின்னர் சாட்சிகள் மெய்யன், அழகர்சாமி மற்றும் மகஜர் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அதே தேதியில் 14.00 மணிக்கு நத்தம் செந்துறை ரோடு, மணக்காட்டுர் பேருந்து நிறுத்தம் அருகில் எதிரிகள் பாக்கியராஜ், தங்கையா, பழனிச்சாமி, பால்ச்சாமி, சுந்தர்ராஜ் ஆகியோரை காரணம் கூறி கைது செய்தும், பாக்கியராஜ் என்பவர் தானாக முன்வந்து அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் பிச்சைமணி, குமரேசன் ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்துள்ளார். பாக்கியராஜ் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அவரிடமிருந்து திருடுபோன ரூ.10,000/–த்தில் ரூ.9,900/– தொகையை செலவு செய்தது போக மீதமிருந்த இரண்டு 50 ரூபாய்

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Date: 2026.03.26 15:12:03 +0530

நோட்டுக்கள் வீதம் ரூ.100/—ம், கத்தி ஒன்றும் பாக்கியராஜிடமிருந்து மேற்படி சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றி அத்தாட்சி தயார் செய்துள்ளார். கைப்பற்றப்பட்ட பொருட்களை அ.த.சா.ஆ.9 படிவம் 91 வாயிலாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். எதிரிகள் செல்வம், பொன்னன், நாகராஜ் ஆகியோர் சம்பவத்தில் ஈடுபடவில்லை என்பது தெரியவந்ததால் அ.த.சா.ஆ.10 எதிரி நீக்கல் அறிக்கை தயார் செய்து இவ்வழக்கின் சட்டப்பிரிவை 324, 395, 506(2) இதச பிரிவுகளிலிருந்து இதச பிரிவு 394 ஆக மாறுதல் செய்து அ.த.சா.ஆ.11 சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்து இவ்வழக்கின் புலன்விசாரணையை முடித்து எதிரிகள் மீது மேற்சொன்ன சட்ட பிரிவு மாறுதல் அறிக்கையில் கண்ட சட்டப்பிரிவின் கீழ் 30.11.2015ம் தேதி குற்றயிறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

10) பதிவு செய்யப்பட்ட அரசு தரப்பு சாட்சியங்களில் எதிரிகளுக்கு பாதகமான சங்கதிகளை குறித்து 313(1)(ஆ)ன் கீழ் எதிரிகளிடம் எடுத்துக்கூறி விளக்கி வினவியபோது அரசுத்தரப்பு சாட்சியம் பொய் என்றும், தங்கள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறினார்கள். அரசு தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் இந்த வழக்கில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், எதிரிகளுக்கு உரிய தண்டனை வழங்கவேண்டும் என்றும் வாதிட்டார்கள்.

11. அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் தங்களது வாதத்தில் எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள வழக்கு அரசுதரப்பு சாட்சிகளின் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது எனவும், குற்றவாளிகளுக்கு தகுந்த தண்டனை வழங்க வேண்டுமென்றும் வாதிட்டார்கள்.

12. எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் இவ்வழக்கின் சாட்சிகள் அரசு தரப்பு வழக்கை நிரூபிக்கும் வகையில் எந்தவொரு சாட்சியமும்

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.03.26 15:12:09 +0530

அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் இடம்பெறவில்லை என்றும் வாதிட்டார். மேலும், அரசு தரப்பில் எதிரிகளின் மீதான குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்ற அடிப்படையில் எதிரிகளை விடுதலை செய்யுமாறு வேண்டினார்கள்.

**<u>தீர்மானிக்கப்பட வேண்டிய பொருண்மை:</u>**

13. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்,

1) அரசு தரப்பில் எதிரிகள் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசுத் தரப்பால் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதும்,

2) அவ்வாறு நிரூபணம் செய்யப்பட்டால் எதிரிகளுக்கு கிடைக்கக்கூடிய தண்டனை குறித்த விபரம் என்ன? என்பதேயாகும்.

<u>தீர்வு</u>

14.1) கடந்த 21.10.2015ம் தேதி காலை 08.00 மணியளவில் வாதி மெய்யன், பட்டியல்சாட்சி 2 அழகர்சாமியுடன் ஆட்டுக்கடா வாங்க பணம் ரூ.10,000/–உடன் நடந்து சென்ற போது 1 முதல் 5 எதிரிகள் அரிவாள், கத்தி, கம்பு, கயிறு போன்ற ஆயுதங்களுடன் கொள்ளை அடிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் வந்து வாதி மெய்யன் கழுத்தில் 1வது எதிரி பாக்கியராஜ் கத்தியை வைத்தும், 2வது எதிரி தங்கையா கத்தியை காட்டியும், 3வது எதிரி பழனிச்சாமி கயிற்றால் வாதி மெய்யனின் கழுத்தை நெறித்தும், 4வது எதிரி பால்சாமி அரிவாளால் வாதிக்கு உயிர்பயத்தை ஏற்படுத்தியும், 5வது எதிரி சுந்தரராஜ் வாதி மெய்யன் பாக்கெட்டில் இருந்த பணம் ரூ.10000/–த்தை திருடியதாகவும் அதை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கும் பொறுப்பு அரசு தரப்பிடமே உள்ளது.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Date: 2026.03.26 15:12:14 +0530

14.2) அந்த வகையில், இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 மெய்யன் (புகார்தாரர்) அவர்கள் அளித்துள்ள சாட்சியத்தை பரிசீலனை செய்த வகையில், "ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். சுமார் 10 வருடங்களுக்கு முன்பாக ஒரு நாள் ஆட்டோவில் லைசென்ஸ் இல்லை என்பதற்காக போலீசார் என்னிடம் வெள்ளை பேப்பரில் கையொப்பம் வாங்கினார்கள். எனக்கு இந்த வழக்கை பற்றி எதுவும் தெரியாது" என்று சாட்சியமளித்து அவர் அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக கருதப்பட்டுள்ளார். அ.சா.1 எதிரிகளை அடையாளம் காட்டவில்லை என்பதும், அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது போல் குற்ற சம்பவம் நடந்ததாக அ.சா.1 தனது சாட்சியத்தில் தெரிவிக்கவில்லை. இதன்மூலம் அரசு தரப்பு வழக்கு சந்தேகிக்கும் வகையில் அமைந்துள்ளது என்பதை காண முடிகிறது.

14.3) பார்வைமகஜர் சாட்சியான அ.சா.2 தென்னரசு தனது சாட்சியத்தில் "தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதில்லை. போலீசாரிடம் நான் இதற்கு முன்பாக கையொப்பம் எதுவும் செய்யவில்லை." என்று சாட்சியமளித்து அவர் அரசு தரப்பில் பிறழ்சாட்சியாகியுள்ளார். இதன் மூலம் பார்வைமகஜர் சம்பவயிடத்தில் வைத்து தயார் செய்யப்பட்டதா என்பதும், மேற்படி சாட்சி முன்னிலையில் தயார் செய்யப்பட்டதா என்பதும் கேள்விக்குறியாகியுள்ளது.

14.4) ஒப்புதல்வாக்குமூல சாட்சியான அ.சா.3 குமரேசன் தனது சாட்சியத்தில் "அ.சா.1ஐ தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணங்களில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையது. சுமார் 10 வருடங்களுக்கு முன்பாக ஒரு நாள் காவல் நிலையத்தில் வைத்து போலீசார் சாட்சியாக கையொப்பம் கேட்டதன் பேரில் நான்

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.03.26 15:12:24 +0530

கையொப்பம் செய்தேன்" என்று சாட்சியமளித்து அவர் அரசு தரப்பில் பிறழ்சாட்சியாகியுள்ளார். மேற்படி சாட்சி தனது குறுக்கு விசாரணையில் "நான் காவல் நிலையத்தில் கையொப்பம் செய்த ஆவணத்தில் எதற்காக கையொப்பம் வாங்குகிறார்கள் என்று போலீசார் என்னிடம் சொன்னார்களா என்றால் இல்லை. நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்று தெரியுமா என்றால் தெரியாது. சாட்சியாக இருக்க சொல்லி போலீசார் என்னை பஸ் ஸ்டாண்டில் இருந்து அழைத்து சென்றார்கள். நான் கையொப்பம் செய்தபோது என்னுடன் வேறு யாரும் கையொப்பம் செய்தார்களா என்றால் எனக்கு தெரியாது" என்று சாட்சியம் அளித்துள்ளார். இதன்மூலம் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது போல் மேற்படி சாட்சி முன்னிலையில் 1ம் எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டதா என்பதும், 1ம் எதிரியிடமிருந்து வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்பட்டதா என்பதும் சந்தேகத்திற்குரியதாக உள்ளது.

14.5) அ.சா.1 முதல் அ.சா.3 அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் பிற பட்டியல் சாட்சிகளை நீக்கம் செய்வதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டு, அரசு தரப்பில் நத்தம் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் உலகநாதன் அவர்கள் அ.சா.4 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.4 தனது குறுக்கு விசாரணையில் "எதிரிகளுக்கும், புகார்தாரருக்கும் இந்த வழக்கிற்கு முன்பே அறிமுகம் உள்ளதா என்றால் அதுபற்றி தெரியாது. எதிரிகளை கைது செய்யும்போது எதிரிகள் யாராவது மதுஅருந்தியிருந்தார்களா என்றால் இல்லை. ஒப்புதல் வாக்குமூலம் என்னால் தயார் செய்யப்பட்டது என்றாலும், அதிலுள்ள விபரங்கள் 1ம் எதிரிக்கு தெரியாது என்றாலும் சரியல்ல. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரிகள் மது அருந்துவதற்கும், பிரியாணி சாப்பிடுவதற்கும் ரூ.9900/-ஐ செலவு செய்துள்ளார்கள் என்று குறிப்பிட்டு நிலையில் எதிரிகள் யாரும் மது அருந்தியதாக தெரியவரவில்லை என்பதால் அது பொய்யானது என்றால் சரியல்ல. எப்போது மது அருந்தினார்கள் என்பதை விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரிகள் எந்த மதுக்கடையில் மதுஅருந்தினார்கள் எந்த கடையில்

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Date: 2026.03.26 15:12:30 +0530

பிரியாணி சாப்பிட்டார்கள் என்று குறிப்பிடவில்லை என்றாலும், அதை விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை என்றாலும் சரிதான்" என்று சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சாட்சியம் வாயிலாக புலன்விசாரணை சரிவர நடைபெறவில்லை என்பதும், அரசு தரப்பு வழக்கு சந்தேகத்திற்குரியதாக உள்ளதையும் அறிய முடிகிறது. ஏனெனில் வழக்கு சம்பவம் 21.10.2015ம் தேதி காலையில் நடைபெற்றதாகவும், அன்றைய தினமே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, அன்றைய தினமே எதிரிகள் கைது செய்யப்பட்டுள்ளார்கள் என்பதை அ.சா.4–ன் சாட்சியம் வாயிலாக அறிய முடிகிறது. எதிரிகள் எவ்வாறு அடையாளம் காட்டப்பட்டார்கள் என்பது குறித்து தகுந்த முகாந்திரம் அரசு தரப்பில் தெரிவிக்கப்படவில்லை.

14.6) சம்பவத்தால் பாதிக்கப்பட்ட சாட்சியான அ.சா.1 தனது சாட்சியத்தில் எதிரிகள் அரிவாள், கத்தி, கம்பு, கயிறு போன்ற ஆயுதங்களுடன் கொள்ளை அடிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் வந்து தனக்கு உயிர் பயத்தை காட்டி தன்னிடமிருந்து பணத்தை பறித்து சென்றார்கள் என்றோ, எதிரிகளால் தனக்கு காயம் ஏற்பட்டதாகவோ சாட்சியம் அளிக்கவில்லை. மாறாக அவர் தனது முதல்விசாரணையில் ஆஜர் எதிரிகளை தெரியாது என்று கூறி அரசு தரப்பில் பிறழ்சாட்சியாகியுள்ளார். அரசு தரப்பு குறுக்கு விசாரணையிலும் அரசு தரப்பிற்கு ஆதரவாக எவ்வித சாட்சியம் அளிக்கப்படவில்லை என்பதை காண முடிகிறது. மற்ற சாட்சிகள் அரசு தரப்பு வழக்கையொத்து சாட்சியமளிக்காமல் இருப்பதாலும், அ.சா.பொ.1 மற்றும் அ.சா.பொ.2 ஆவணங்கள் எவ்வாறு கைப்பற்றப்பட்டது என்பதே சந்தேகமாகியுள்ளதாலும், மற்ற சாட்சிகளின் சாட்சியங்களும் எதிரிகளை குற்றத்தோடு தொடர்புபடுத்தும் வகையில் அரசு தரப்பு சாட்சியம் அமையாத நிலையிலும், எதிரிகளை அரசு தரப்பு சாட்சிகள் அடையாளம் காட்ட தவறியுள்ள நிலையிலும், எதிரிகள் தான் குற்றத்தை புரிந்துள்ளார் என்று அரசு தரப்பில் நிரூபிக்காத நிலையிலும், அரசு தரப்பில் பிற சாட்சிகள் விசாரிக்காத

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.03.26 15:12:36 +0530

நிலையிலும், அ.சா.4–ன் சாட்சியத்தை வைத்து மட்டும் எதிரிகள் தாங்கள் குற்றம் புரிந்திருப்பார்கள் என்று தீர்மானிப்பது நீதியின் நலனுக்கும், இயற்கை நீதிக்கும் உகந்ததல்ல என்றும் இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**இறுதியாக, எதிரிகள் மீதான பிரிவு 394 இ.த.சவின் கீழ் சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டு தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று தீர்மானித்து, எதிரிகளை மேற்படி பிரிவின் கீழ் குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து எதிரிகளை கு.வி.மு.ச.பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரிகள் இவ்வழக்கில் கொடுத்துள்ள பிணைமுறி மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்தாக உத்தரவிடப்படுகிறது.**

**எதிரிகள் நிறைவேற்றி தந்த பிணைமுறி மேல்முறையீட்டு காலத்திற்கு பின்பு ரத்தாக உத்தரவிடப்படுகிறது.** **இவ்வழக்கில்** RPR No.15/2026**ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள பணம் ரூ.**50/– (2 **நோட்டுகள் மொத்தம் ரூ.100/–**) **தற்போது வரை மேற்படி தொகையை கோரி யாரும் மனு செய்யவில்லை என்பதை கவனத்தில் கொண்டும், மேல்முறையீட்டு காலத்திற்குள் உரியமுறையில் மனு செய்யும்பட்சத்தில் மேற்படி சொத்து தொடர்பாக உத்தரவு பிறப்பிக்கப்படும் என்றும், இல்லாத பட்சத்தில் அந்த தொகையை அரசுக்கு ஆதாயப்படுத்த வேண்டும் என்றும், அ.சா.பொ.2 கத்தியை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அழிக்கவும் உத்தரவிடப்படுகிறது.**

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின் என்னால்

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Date: 2026.03.26 15:12:42 +0530

பிழை நீக்கம் செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் நீதிமன்ற இலட்சணையுடன் அவையறிய 26.03.2026–ம் தேதி பகரப்பட்டது.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Date: 2026.03.26 15:12:50 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், நத்தம்.

**அரசு தரப்பு சாட்சிகள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | அ.சா.1 | 13.03.2026 | திரு.மெய்யன் (புகார்தாரர்) |
| 2. | அ.சா.2 | 13.03.2026 | திரு.தென்னரசு (பார்வைமகஜர் சாட்சி) |
| 3. | அ.சா.3 | 17.03.2026 | குமரேசன் (ஒப்புதல் வாக்குமூல சாட்சி) |
| 4. | அ.சா.4 | 23.03.2026 | உலகநாதன் (புலன் விசாரணை அதிகாரி) |

**அரசு தரப்பு சான்றாவணங்கள் :**

| வ. எண் | சான்றாவணங்கள் | தேதி | சான்றாவணங்களின் விபரங்கள் |
|---|---|---|---|
| 1. | அ.த.சா.ஆ.1 / அ.சா.1 | 21.10.2015 | புகார் மனுவில் உள்ள கையொப்பம் |
| 2. | அ.த.சா.ஆ.2 / அ.சா.3 | 21.10.2015 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் |
| 3. | அ.த.சா.ஆ.3 / அ.சா.3 | 21.10.2015 | அத்தாட்சியில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் |
| 4. | அ.த.சா.ஆ.4 / அ.சா.4 | 21.10.2015 | முதல் தகவல் அறிக்கை |
| 5. | அ.த.சா.ஆ.5 / அ.சா.4 | 21.10.2015 | மாதிரிவரைபடம் |
| 6. | அ.த.சா.ஆ.6 / அ.சா.4 | 21.10.2015 | பார்வைமகஜர் |
| 7. | அ.த.சா.ஆ.7 / அ.சா.4 | 21.10.2015 | ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி |
| 8. | அ.த.சா.ஆ.8 / அ.சா.4 | 21.10.2015 | கைப்பற்றுதல் மகஜர் |
| 9. | அ.த.சா.ஆ.9 / அ.சா.4 | 21.10.2015 | படிவம் 91 |

| | | | |
|---|---|---|---|
| 10. | அ.த.சா.ஆ.10 / அ.சா.4 | 30.11.2015 | எதிரி நீக்கல் அறிக்கை |
| 11. | அ.த.சா.ஆ.11 / அ.சா.4 | 30.11.2015 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |

**அரசு தரப்பு சான்று பொருள்கள்**

1. அ.சா.பொ.1 – ரூ.50/– நோட்டுகள் (இரண்டு)

2. அ.சா.பொ.2 – கத்தி – 1

**எதிரிகள் தரப்பில் சாட்சிகள்** : **இல்லை**

**எதிரிகள் தரப்பில் சான்று பொருள்கள்** : **இல்லை**

**எதிரிகள் தரப்பில் சான்றாவணம்** : **இல்லை**

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Date: 2026.03.26 15:12:58 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், நத்தம்.

**குறிப்பு:**

1. இவ்வழக்கு விசாரணையின்போது நீதிமன்றத்திற்கு சாட்சியளிக்க வந்த எந்த சாட்சிகளும் விசாரிக்கப்படாமல் திருப்பி அனுப்பப்படவில்லை.

2. வழக்கு விசாரணையின் போது எதிரிகள் பிணையில் இருந்தார்கள்.

3. வழக்கின் முடிவு எதிரிகளுக்கும் காவல் துறையினருக்கும் தெரிவிக்கப்பட்டது.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Date: 2026.03.26 15:13:03 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், நத்தம்.